# புகார் செய்பவர் மற்றும் எதிர் தரப்புக்கான மத்தியஸ்தம்

ஒரு மேஜிஸ்திரேட் புகாரில் நீங்கள் புகார் செய்தவர் அல்லது எதிர் தரப்பு, அல்லது தொந்தரவிலிருந்து பாதுகாக்கும் நீதிமன்றம் அல்லது சமூக சர்ச்சைத் தீர்வு மன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் உள்ளவர். அதன் அடிப்படையில், நீங்கள் அரசு நீதிமன்றகளின் நீதிமன்ற சர்ச்சை தீர்வு குழுமத்தால் (CDRC) நடத்தப்படும் மத்தியஸ்தத்திற்கு வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளீர்கள். வழக்கை விசாரணைக்குக் கொண்டு போகாமல் எல்லா தரப்பினராலும் மனதார ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு தீர்வை எட்டுவதற்கு உதவுவதே மத்தியஸ்தத்தின் குறிக்கோளாகும்.



# புகார் செய்பவர் மற்றும் எதிர் தரப்புக்கான மத்தியஸ்தம்

## மத்தியஸ்தம் என்றால் என்ன?

### அது சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழி

மத்தியஸ்தர் நடுநிலையான மூன்றாம் தரப்பு ஆவார். நீதிமன்றத்துக்குச் செல்லாமல் வழக்கைச் சுமூகமாக தீர்த்துக்கொள்ள தரப்புகளிடையே பேச்சுவார்த்தைகளை நடத்த அவர் உதவுவார். மத்தியஸ்தர், சர்ச்சையில் யார் பக்கமும் பேசமாட்டார், பாரபட்சமாகவும் நடந்துகொள்ளமாட்டார். அவர் சட்டம் சார்ந்த அல்லது மற்ற ஆலோசனை ஏதும் வழங்கவும் மாட்டார்.

### அது மத்தியஸ்தரால் வழிநடத்தப்படும் ஒரு கூட்டம்

இரு தரப்புகளும் சம்மதம் தெரிவிக்கும் ஒரு சமரச தீர்வை எட்டுவதற்கு மத்தியஸ்தர் உதவுவார். மற்ற தரப்பு நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களின் அக்கறைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்று எப்படி நீங்கள் விரும்புவீர்களோ, அதுபோலவே மற்ற தரப்பு கூறுவதை நீங்களும் கேட்க தயாராக இருக்க வேண்டும், அவரது அக்கறைகளை நீங்கள் எப்படி கருத்தில் கொள்ளலாம் என்றும் பரிசீலிக்க வேண்டும்.

### அது ஒரு விசாரணை அல்ல

சர்ச்சையில் யார் சரி, யார் தவறு என்று மத்தியஸ்தர் மதிப்பிடவோ முடிவு செய்யவோ மாட்டார்.

### அந்தரங்கமானது மற்றும் உரிமைக்குப் பாதகமற்றது

மத்தியஸ்தத்தில் கலந்து பேசப்பட்ட விவகாரங்கள் அந்தரங்கமானவை மற்றும் உரிமைக்குப் பாதகமற்றவை.

"அந்தரங்கம்" என்றால் மத்தியஸ்தத்தின்போது தரப்புகள் கலந்து பேசும் அனைத்தும் வேறு யாரிடமும் வெளியிடப்படாது மற்றும் வெளியிடப்படவும் கூடாது.

"உரிமைக்குப் பாதகமற்றது" என்றால் மத்தியஸ்தத்தின் மூலம் சர்ச்சை தீர்க்கப்பட முடியவில்லை என்றால், மத்தியஸ்தத்தின்போது தரப்பினர் பகிர்ந்துகொண்டவை வெளியிடப்படவோ மற்றும் அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படவோ முடியாது.

## சர்ச்சையைத் தீர்த்துக் கொள்ளுமாறு மத்தியஸ்தர் தரப்புகளைக் கட்டாயப்படுத்துவாரா?

இல்லை. சர்ச்சையைத் தீர்த்துக் கொள்ளுமாறு மத்தியஸ்தர் தரப்புகளைக் கட்டாயப்படுத்த மாட்டார். சர்ச்சையைத் தீர்க்க, தரப்புகள், ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் ஒரு தீர்வைக் கண்டுப்பிடிக்க உதவுவதே மத்தியஸ்தரின் குறிக்கோளாகும். சர்ச்சையைத் தீர்த்துக்கொள்ளும் முடிவும் மற்றும் தீர்வின் விவரங்களும் முற்றிலும் இரு தரப்பாலும் தீர்மானிக்கப்பட்டு மற்றும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

## மத்தியஸ்தர் யார்?

CDRC - யில் உள்ள மத்தியஸ்தர்கள், நீதிபதிகள், தொண்டூழியர்கள் மற்றும் சமாதான நீதிபதிகள் (ஜஸ்டிஸஸ் ஆப் பீஸ்) ஆவர்.

## நான் ஏன் மத்தியஸ்த கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்?

வழக்கு விசாரணைக்குச் செல்வதைவிட மத்தியஸ்தத்தில் பல **அனுகூலங்கள்** உள்ளன.

- அந்தரங்கமானது மற்றும் உரிமைக்குப் பாதகமற்ற கலந்துரையாடல்களும் தீர்வுகளும் கொண்டது
- விரைவான தீர்வு
- கூடுதல் மன நிம்மதி
- குறைந்த செலவு
- குறைந்த மனவுளைச்சல்
- கூடுதல் நீக்குப்போக்கானது மற்றும் விதிமுறை சாராதது
- முடிவின் விளைவில் தரப்புகளுக்குக் கூடுதல் கட்டுப்பாட்டு ஆற்றல் உள்ளது

## மத்தியஸ்தத்தில் நான் கலந்துகொள்ளவில்லை என்றால் என்ன நடக்கும்?

வழக்கு நடைமுறையின் ஓர் அம்சமாக பணியிலுள்ள மேஜிஸ்திரேட் / நீதிபதி, வழக்கு மத்தியஸ்தத்திற்குச் செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

புகார் செய்பவர் மத்தியஸ்தத்திற்கு வரத் தவறினால், வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம். எதிர் தரப்பு மத்தியஸ்தத்திற்கு வரத் தவறினால் மற்றொரு மத்தியஸ்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்படலாம் அல்லது மேல் நடவடிக்கைக்காக உரிய இலாக்காவிற்கு வழக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படலாம். வழக்கு உரிய இலாக்காவிற்கு மீண்டும் அனுப்பிவைக்கப்பட்டால், எதிர் தரப்பு ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் நீதிமன்றம் சாராத தீர்வை எட்ட புகார் செய்தவரோடு ஒரு தனிமுறையான மற்றும் அந்தரங்கமான முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தும் வாய்ப்பை இழப்பார். பிறகு, புகார் செய்பவர் வழக்கைத் தொடரக்கூடும். அதன் விளைவாக எதிர் தரப்பு வழக்கு விசாரணையை எதிர்நோக்கக்கூடும்.

**எனவே, மத்தியஸ்தத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அனைத்து தரப்புகளும் வலுவாக ஊக்குவிக்கப்படுகின்றனர்.**

## மத்தியஸ்த கூட்டத்தின் போது என்ன நடக்கும்?

**அறிமுகம் மற்றும் இணை கூட்டம்**
மத்தியஸ்தர் புகார் செய்தவர் மற்றும் எதிர் தரப்பு ஆகிய இருவரையும் சந்தித்து மத்தியஸ்த நடைமுறைகளை விளக்குவார். தரப்புகள் சர்ச்சையைப்பற்றிப் பேச வாய்ப்பு கிடைக்கும். தரப்புகள் அக்கறை கொண்டுள்ள பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான சாத்தியமான வழிகளை நாட மத்தியஸ்தர் உதவுவார்.

**தனிப்பட்ட கூட்டங்கள்**
தேவை ஏற்பட்டால், மத்தியஸ்தர் ஒவ்வொரு தரப்புடனும் தனித்தனியாக ஒரு தனிப்பட்ட கூட்டத்தில் பேசுவார். உங்களுக்குள்ள அக்கறைகளை, மற்ற தரப்புடன் பகிர்ந்துகொள்ள உங்களுக்குத் தயக்கமாக இருப்பவை உள்பட, மத்தியஸ்தரிடம் எடுத்து சொல்ல இதுவே சிறந்த சமயம். ஒருவருக்கொருவர் மனதார ஏற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியமான தீர்வுகளைத் தொடர்ந்து ஆராயவும் இது சிறந்த சமயமும் ஆகும். நீங்கள் அனுமதி அளித்தாலெயன்றி, தனிப்பட்ட கூட்டங்களின் போது நீங்கள் கூறிய எதையும் மத்தியஸ்தர் எந்த தரப்பிடமும் கூறமாட்டார்.

**கூடுதலான இணை மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள்**
பயனளிக்கும் என்று மத்தியஸ்தர் எண்ணினால், தரப்புகள் கூடுதலான இணை மற்றும் தனிப்பட்ட கூட்டங்களைப் பெறலாம்.

**கூட்டத்தின் நிறைவு**
தரப்புகள் ஒரு தீர்வை எட்டிவிட்டால், அவர்கள் ஒப்புக்கொண்டதைச் சரி பார்க்கவும், உறுதி செய்யவும் மத்தியஸ்தர் தரப்பினர்களைச் சேர்ந்தே சந்திப்பார். மத்தியஸ்தர் நிபந்தனைகளைப் பதிவு செய்வார், வழக்கும் நிறைவடையும். அதன் பிறகு, இரு தரப்புகளும் தீர்வின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.

தரப்புகள் ஒரு தீர்வை எட்டவில்லை என்றால், மத்தியஸ்தர் கீழ்வருபவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யலாம்:

> மற்றுமொரு மத்தியஸ்த கூட்டத்தொடருக்கு ஏற்பாடு செய்யலாம்; அல்லது

> வழக்கிற்கான அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுக்க வழக்கை உரிய இலாக்காவிற்குத் திருப்பி அனுப்பலாம்.

மத்தியஸ்தங்கள் நேரடியாக அல்லது மெய்நிகர் நீதிமன்ற அமர்வுகளின் வழியாக (ZOOM வாயிலாக காணொளி கூட்டம்) நடத்தப்படுகின்றன. உங்களின் மத்தியஸ்தம் காணொளி கூட்டம் வாயிலாக நடத்தப்படுமா என்பதை CDRC உங்களிடம் தெரிவிக்கும். மெய்நிகர் நீதிமன்ற அமர்வுகளுக்கான வழிகாட்டிக்கு, தயவுசெய்து **www.judiciary.gov.sg/attending-court/virtual-court-sessions** - யைக் காணவும்.

## மத்தியஸ்தத்திற்கு நான் என்ன கொண்டு வர வேண்டும்?

சர்ச்சைக்குத் தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள், புகைப்படங்கள், பதிவுகள் போன்றவற்றை நீங்கள் கொண்டு வர வேண்டும். (உதாரணத்திற்கு, உங்களின் மருத்துவ கட்டணங்களை மற்ற தரப்பினர் உங்களிடம் திருப்பிச் செலுத்தவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்களின் மருத்துவ அறிக்கையையும் இரசீதுகளையும் நீங்கள் கொண்டு வரவேண்டும்.)

## மத்தியஸ்தம் எவ்வளவு நேரம் நீடிக்கும்?

தரப்பினர்கள் எவ்வளவு விரைவாக ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் ஒரு தீர்வுக்கு வருகிறார்கள் என்பதை அது பொறுத்திருக்கும். மத்தியஸ்த கூட்டங்கள் வழக்கமாக ஒரு காலை அல்லது ஒரு மதியம் இடம்பெறும். ஒவ்வொரு கூட்டமும் சுமார் மூன்று மணி நேரம் நீடிக்கும். பல வழக்குகளில், அந்நேரத்திற்குள் தரப்பினர்களால் சர்ச்சையைத் தீர்த்துகொள்ள முடியும். சில வழக்குகளில், நீங்கள் மேலும் ஒரு கூட்டத்திற்கு வர வேண்டிய அவசியமிருக்கலாம்.

## நான் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை அழைத்து வரலாமா?

CDRC - யில் நடைபெறும் மத்தியஸ்தத்திற்கு நீங்கள் ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது நண்பரை அழைத்து வரலாம். ஆனால், அவர்கள் மத்தியஸ்த அறைக்குள் நுழைய மத்தியஸ்தரின் அனுமதி வேண்டும். மெய்நிகர் நீதிமன்ற அமர்வு வழியாக மத்தியஸ்தம் நடத்தப்படும்போது உங்களுடன் வேறு நபர்கள் இருந்தால், நீங்கள் மத்தியஸ்தரிடம் இதனை தெரிவிக்க வேண்டும்.

## ஒரு புகார் செய்பவர் அல்லது எதிர் தரப்பினர் என்ற முறையில் நான் மத்தியஸ்தத்திற்கு ஏதேனும் கட்டணங்கள் செலுத்த வேண்டுமா?

இல்லை. CDRC - யில் இலவசமாக மத்தியஸ்தம் செய்யப்படும்.

## நான் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமா?

சுயமாக மத்தியஸ்த கூட்டத்திற்கு வருவதில் உங்களுக்கு எந்தவொரு தயக்கமும் இல்லையென்றால் நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்க அவசியமில்லை. ஆனால், நீங்கள் முன்னரே ஒரு வழக்கறிஞரை நியமித்திருந்தால், உங்களின் வழக்கறிஞர் மத்தியஸ்த கூட்டத்திற்கு உங்களுடன் வரலாம்.

## மத்தியஸ்தத்திற்கு நான் எவ்வாறு தயார் செய்வது?

**மத்தியஸ்தம் வெற்றிகரமாக அமைய இரு தரப்பினர்களும்:**

> நல்ல நோக்கத்துடன் வரவேண்டும்;

> ஒருவர் மற்றொருவர் கூறுவதைக் கேட்க தயாராக இருக்க வேண்டும், ஒருவர் மற்றொருவரின் நலன்களையும் அக்கறைகளையும் எண்ணிப்பார்த்து ஒருவருக்கொருவர் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்;

> ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வைக் கண்டறிய இணைந்து செயல்பட தயாராக இருக்க வேண்டும்; மற்றும்

> மத்தியஸ்தம் நல்ல பயன் அளிக்கக்கூடியதாக அமைய, நீங்கள் சர்ச்சையைத் தீர்ப்பதில் குறிப்பாக இருப்பதுடன் ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வுகளை எட்ட திறந்த மனதுடன் வரவேண்டும்.

**மத்தியஸ்தத்திற்கு வருவதற்கு முன் நீங்கள் பின்வரும் கேள்விகளைப்பற்றி யோசித்து வைத்துக்கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும்:**

> சர்ச்சையைத் தீர்ப்பதற்கு மற்ற தரப்புக்கு என்ன தேவைப்படக் கூடும், மற்றும் இது ஏன் உங்களுக்கும் / மற்ற தரப்புக்கும் முக்கியமானதாக உள்ளது?

> இரு தரப்புகளுக்கும் சர்ச்சையைத் தீர்த்துவைக்கக்கூடிய எம்மாதிரியான நேர்மையான மற்றும் நியாயமான தீர்வுகளை உங்களால் யோசிக்க முடியும்?

> சர்ச்சையைக் குறித்து விசாரணைக்குச் செல்வது சிறந்ததா, அல்லது மத்தியஸ்த கூட்டத்தில் அதைத் தீர்த்துகொள்வது சிறந்ததா? நேரம், செலவுகள், சௌகரியம், மன நிம்மதி, உறவுகள் மற்றும் வேரேதேனும் நீண்டகால பரிசீலனைகள் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளவும்.

மத்தியஸ்தர் உங்களின் வழக்கை முடிவு செய்ய மாட்டார். எனவே, யார் சரி அல்லது தவறு என்று மத்தியஸ்தரை நம்ப வைக்க முயற்சிப்பது சர்ச்சையைத் தீர்ப்பதில் உதவியாக அமையாது.

பொறுப்புத் துறப்பு அறிவிக்கை: இந்த வெளியீடு பொதுவான தகவல் வழங்கும் நோக்கத்துடன் மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளதேயன்றி, சட்ட ஆலோசனைக்கு மாற்றாக அல்ல. உங்களின் வழக்கு குறித்து சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் ஒரு வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லா பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.

எல்லாத் தகவல்களும் 1 பிப்ரவரி 2022 தேதிப்படி சரியானவை.

**அரசு நீதிமன்றங்கள்**
1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
தொலைபேசி எண்: 6 JUSTICE (65878423)
www.judiciary.gov.sg